# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1803/3 - 2013 මාර්තු මස 25 වැනි සඳුදා - 2013.03.25

*1803/3 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்*

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம்* இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் *3 ஆம்* பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சராகிய மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், கீழ்வரும் அட்டவணை I இன் நிரல் I இல் குறிப்பிடப்பட்ட பகுதிகள் அதன் நேரொத்த பகுதியின் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லைகளையும் வரையறைகளையும் கொண்டுள்ளதுமான இடப்பகுதி அபிவிருத்திக்குப் பொருத்தமானதென அபிப்பிராயப்படுவதனால், அப்பகுதியினை நகர அபிவிருத்திப் பகுதியாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு,
இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,
கொழும்பு 03,
*2013, மாச்சு 11.*

**அட்டவணை *I***

ஏறாவூர் நகர அபிவிருத்திப் பகுதி

*நிரல் - I*

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள கி. சே. பி. இல. *190* ஏறாவூர் -1 , கி. சே. பி. இல. *190* A ஏறாவூர் - 1A , கி. சே. பி. இல. *191* ஏறாவூர் - 2, கி. சே. பி. இல. *191* A ஏறாவூர் - 2 A, கி. சே. பி. இல. *191* B ஏறாவூர் - 2 B, கி. சே. பி. இல. *192* ஏறாவூர் - 3, கி.சே. பி இல. *192*A ஏறாவூர் - 6, கி. சே. பி. இல. *192* B ஏறாவூர் - 3 A, கி. சே. பி. இல. *192*C ஏறாவூர் - 6A, கி. சே. பி. இல. *194* ஏறாவூர் - 4, கி. சே.பி. இல. *194* A ஏறாவூர் - 5, கி. சே. பி. இல. *190*B எல்லை நகர், கி. சே. பி. இல. *194* B ஏறாவூர் - 1B, கி. சே. பி. இல. *191*C ஏறாவூர்- 2C , கி. சே. பி. இல. *192*D ஏறாவூர் - 6D ஆகியவற்றின் சகல காணிகளும் இவ்வட்டணையின் நிரல் II இல் குறித்துரைக் கப்பட்டவாறு எல்லைகளையும் வரையறைகளையும் கொண்டுள்ளன.

*நிரல் - II*

வடக்கு : வடக்கு எல்லை வீதி திருகோணமலை- மட்டக்களப்பு வீதியைச் சந்திக்கும் ஆரம்பப் புள்ளியிலிருந்து வடக்கு எல்லை வீதி ஊடாக வடக்கிற்கு நோக்கி கிழக்கு எல்லை வீதியை சந்திக்கும் புள்ளி வரையும், அங்கிருந்து குறித்த வீதி ஊடாக தென்கிழக்கு திசைநோக்கி குடியிருப்பு ஒழுங்கையின் வடக்கு சந்திக்கும் புள்ளி வரையும், வரையப்பட்ட கோட்டின் மூலமும் ;

கிழக்கு : கடைசியாக குறிப்பிட்ட புள்ளியிலிருந்து தெற்கு நோக்கி குடியிருப்பு ஒழுங்கை ஊடாக திருகோணமலை - மட்டக்களப்பு வீதி ஊடாக குடியிருப்பு ஒழுங்கையின் எதிர்புற ஒழுங்கையைச் சந்திக்கும்

**அட்டவணை** *I* (தொடர்ச்சி)

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| | புள்ளி வரையும் அங்கிருந்து அந்த ஒழுங்கை மற்றும் காணிகளின் ஊடாக களப்பு வரையப்பட்ட கோட்டின் மூலமும் ; |
| | தெற்கு : கடைசியாக குறிப்பிட்ட புள்ளியிலிருந்து களப்பின் கீழ் நீர் மட்டத்தின் ஊடாக மேற்கு நோக்கி நயின வேலி வலய ஒழுங்கையைச் சந்திக்கும் புள்ளி வரையும் வரையப்பட்ட கோட்டின் மூலமும் ; |
| | மேற்கு : கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து வடக்கு நோக்கி வயல் ஒழுங்கை மற்றும் வட்டவிதானை ஒழுங்கையின் ஊடாக தாமறைவிக்குளம் வரையும், அங்கிருந்து தமரவிக் குளத்தின் கிழக்கு மற்றும் வடக்கு எல்லைகளின் ஊடாக மாட்டு வண்டி வீதி வரையும் அங்கிருந்து மாட்டு வண்டி வீதி ஊடாக ஆரம்பப் புள்ளி வரை வரையப்பட்ட கோட்டின் மூலமும். |

*4- 308*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.